THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 7th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Village Officers

*146 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to make the Village Officers, full time workers ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: *தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.*

(இ) இது எழவில்லை.

THIRU V. ISVARMURTI : The subject of making the Village Officers full time Government servants subject to transfer all over the State is hanging fire for quite a long time. So I would like to ask the Hon. Minister whether the Government have any definite policy of bringing about this reform soon.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவ்வளவு சீக்கிரமாக முடிக்கக்கூடிய காரியமல்ல இது. மாண்புமிகு நமது சட்டமன்றத் தலைவர் அவர்கள் ரெவின்யூ அமைச்சராக இருந்த காலத்திலிருந்து துவங்கப்பட்ட இந்தக் காரியம் இன்னும் முடிவுபெறாமல் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்னாள் நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களைச் சேர்த்து ஒரு கமிட்டி போட்டார்கள். அதில் இதை எப்படிச் செய்யலாம் என்று ஒரு சிபார்சு செய்தார்கள். கிராம முன்சீப்களையும் கணக்குப்பிள்ளைகளையும் ஒன்றாகச் சேர்த்து முழு நேர அதிகாரியாக நியமித்துவிடுவது என்றும், அவர்களுக்குக் கீழே மூன்று முழு நேர ஊழியர்களை நியமித்து, பெரிய கிராமமாக இருந்தால் அடிஷனலாக ஒரு கிராம ஆபீசரை நியமிப்பது என்றும் சிபாரிசு செய்யப்பட்டது. அபோதிருந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளாமலேயே தள்ளி விட்டது. அதற்குச் சில காரணங்களைக் கூறினார்கள். அரசாங்க ஊழியர்களாக அவர்களைச் செய்து விடுவது என்றால் இன்றைக்கு ஏற்கனவே இருக்கிற ஒரு திறமை அதிகமாகுமா, இன்றைக்குள்ள இடைஞ்சல்களும் சிரமங்களும் அந்த வேலைப் பளுவும் குறையுமா என்பது ஒன்று. இரண்டாவது, இப்படிச் செய்வதன் மூலமாக ஏற்கனவே உள்ள கிராம அதிகாரிகள் வேலையிழந்து வேலையில்லாத் திண்டாட்டம்

போன்ற புதிய பிரச்னையை அது தோற்றுவிக்குமோ என்பது. மூன்றாவதாக ஏற்கனவே 30 ஆயிரம் பேர் கிராம முனிசீப்பாகவும் மற்ற உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கிற பரம்பரை அடித்தளம் கெட்டுவிடுமோ என்பது. நான்காவது, புதிதாக உத்தியோகஸ் தர்கள் நியமனம், அவர்கள் லீவு, அவர்கள் பயிற்சி, அவர்களுக்கு வேண்டிய தகுதிகள் இவைகள் எல்லாம் செய்வதில் தடையும், தாமதமும் ஆகிவிடுமோ என்பது. ஐந்தாவது, புதிய நிர்வாக அமைப்பை, 20 ஆயிரம் 30 ஆயிரம் பேர் இருக்கிற அமைப்பை, ஏற்றுக் கொள்ள நிதி ஆதாரம் போதுமா என்பது.

மிஸ்டர் சேர்மன் : ஆறுவதாக, பணக் கஷ்டம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதை அமுல் படுத்து வதற்கு பணம் தேவைப்படுகிறது. அதைப் பற்றி வருவாய்த் துறை வாரியத்தைக் கேட்டோம். Subject to correction 3, அல்லது 4 கோடி ரூபாய் ஆண்டுதோறும் ஆகுமளவுக்கு இருக்கிறது. இவ்வளவு சங்கடங்களும் அந்த யோசனையை ஏற்றுக் கொள்வதில் இருப்பதாக வருவாய்த்துறை வாரியம் சொல்லியது. அதற்குப் பதிலாக இப்போதிருக்கிற பரம்பரை சட்டத்தை ஹெரிடிட்டரி வில்லேஜ் ஆபீசர்ஸ் ஆக்டை ரிபீல் செய்துவிட்டு வேறு புதுச் சட்டத்தின் கீழ் அதற்கான விதிமுறை போடுவதற்கு யோசனை செய்யப்பட்டு வருகிறது. அவை பரிசீலனையின் இருக்கின்றன.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டில் கிராம உத்தியோகஸ்தர்களின் பரம்பரை பாத்தியம் அடிபட்டுப்போய்விட்டது. அதனால் கிராம உத்தியோகஸ்தர்கள் நிலையைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறோம். நம் தலைவர் அனுபவத்தின் காரணமாக பணம் வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 850 பேருள்ள ஒரு கிராமத்தில் கிராம முனிசீப், கர்ணம், வெட்டியான், தலையாரி என்று நான்கு உத்தியோகஸ் தர்கள் இருக்கிறார்கள். அதை மாற்றி 10 ஆயிரம் பேருள்ள கிராமங்களுக்குப் பதிலாக அதை 3 ஆயிரம், 4000 ஆக ஆக்கி எஸ். எஸ். எல். சி. படித்தவர்களை முழு நேர ஊழியர்களாகப் போடலாம். கிராம முனிசீப், கர்ணம் இருவருடைய வேலையையும் ஒருவரிடமே ஒப்புவிக்கலாம். இதை அரசு பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதையெல்லாம்தான் சொல்கிறேன். பரம்பரை பாத்தியதை அடிபட்டுப்போனாலும் கூட அதனால் இந்த ஆபத்து வருகிறது. எல்லா கிராமங்களும் அவர்கள் சொல்வது போன்றில்லை. இருபது ஆயிரம் பேர் இருப் பதை 10 ஆயிரமாக ஆக்கினாலும் அரசாங்கம்தான் அவர்களுக்குப் பொறுப்பாளி. அவர்களுக்கு மாற்று வேலை என்ன என்பது ஒன்று. ஏற்கனவே பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் இருக்கிறது.

7th March 1969]

இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முறையில் பரம்பரை பாத்தியதை முறையில் இனிமேல் கிராம முனிசீப் வரமுடியாது. ஆகையால் எல்லா அம்சங்களையும் பார்த்து ஏற்கனவே இருக்கிறவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. சா. கணேசன் : பரம்பரை பாத்தியதை உரிமை சுப்ரீம் கோர்ட்டில் உடைபட்டுப் போனாலும் பரம்பரையில் வருகிறவர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக விசேஷ ஞானமும் காரியம் செய்கிற முறையும் படிந்திருப்பதால் அதனால் அரசுக்கும் செலவு மிச்சமாகும் நிலையிலிருப்பதால், அவர்களுக்கு உரிமை என்ற முறையில் இல்லாவிட்டாலும் சலுகைகாட்டி, முதன்மை கொடுக்கிற அளவில் அவர்களை மீண்டும் அந்தத் துறையில் நியமிக்கிற ஏற்பாடு அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதா? இல்லாவிட்டால் அதைக் கருத்தில் கொண்டு செயல்பட முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் சொன்னேன். எல்லா இடத்திலும் கிராம முனிசீப்பை எடுப்பதில்லை என்ற முடிவை ஏற்றுக்கொண்டால் புதிதாகப் போடும் அவசியமில்லை. புதிதாக நியமனம் செய்யவேண்டுமென்று நிலைமை வந்தால் பத்தாவது வகுப்பு தகுதி என்று வைத்துக்கொண்டால், ஏற்கனவே பத்தாவது வகுப்பு படித்துள்ள கிராம முனிசீப்களுக்கும் அப்படிப்படித்த கிராம முனிசீப்பின் மகன்களுக்கும் சலுகை கொடுப்பதில் தவறில்லை. அதைத்தான் அரசாங்கம் யோசிக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : அமைச்சருக்கு இன்னொரு புதிய யோசனை கூறுகிறேன். கிராமப் பஞ்சாயத்து இருக்கிறது. அதில் எக்சிகியூட்டிவ் ஆபீசர் இல்லாததவையும் உண்டு. அப்படி மூன்று நான்கு கிராமப் பஞ்சாயத்தை ஒன்றாக இணைத்து எக்சிகியூட்டிவ் ஆபீசரை நியமித்து அவர்களே கிராம முனிசீப் வேலையையும் பார்க்கும்படி செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்து வருஷங்களாக இந்த விபத்தில் மாட்டிக் கொள்ளாமல் அவர் சார்ந்துள்ள அரசாங்கமே செய்யத் தயங்கிய காரியத்தை, கிராம அடித்தளம் போன்ற கிராமப் பொருளாதாரத்தில் பங்கு கொண்டுள்ள 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு நிர்வாக இயந்திரத்தின் விவகாரத்தில் இந்த அரசைச் சிக்க வைக்கவேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் நினைக்கிறாரோ என்று கருதுகிறேன். மேல் தோற்றத்திற்கு அது நன்றாக இருக்கிறதே தவிர உண்மையான நிலைமைக்கும் நாம் போக வேண்டிய நிலைமைக்கும் மத்தியஸ்தம் செய்யவேண்டியிருக்கிறது.

[7th March 1969

திரு. வி. தங்கபாண்டியன் : தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலே பல ஆண்டுகளாக வேலை செய்து வந்த வெட்டியான், தலையாரி போன்றவர்களை வேலை நீக்கம் செய்திருப்பது உண்மையா ? அதிக எண்ணிக்கை உள்ள அவர்கள் குறைந்த சம்பளம் பெறுகிறவர்களாக இருப்பதால் மீண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க அல்லது மாற்று வேலை கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சில இடங்களில் தேவையில்லாத போது ஆட் குறைப்பு நடைபெறுகிறது. அவசியமான சாத்தியக்கூறான வகையில் மாற்று வேலைகள் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. டி. கே. பொன்னுவேலு : கிராம உத்தியோகஸ்தர்களாக கிராம முனிசிப்புக்கு ரூ. 36 என்றும் கர்ணத்துக்கு ரூ. 38 என்றும் வெட்டியான் தலையாரிக்கு ரூ. 17 என்றும் ஊதியம் குறைந்த அளவில் இருக்கிறது. என்.ஜி.ஓ., பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்களுக்குப் பலமுறை ஊதிய உயர்வு கொடுத்ததைப் போன்று கிராம உத்தியோகஸ்தர் நிலையையும் கனிவுடன் கவனித்து அரசு ஊதிய உயர்வு கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி நிதி ஆதாரத்தைப் பொருத்த பிரச்னை அது. கிராம உத்தியோகஸ்தர்களைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மட்டும் பாவிக்கவில்லை. அவர்கள் கௌரவம் மிக்க உத்தியோகஸ்தர்களாக, பொதுத் தொண்டு செய்பவர்களாக, கிராமத் தலைவர்களாக நீண்ட நாட்களாக இருந்துவருகிறார்கள். கௌரவமும் பணி செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் முக்கியமே தவிர வெறும் ரூ. 36, ரூ. 38-க்கு மட்டும் இல்லை. ஆனால் அரசாங்கத்தின் நிதி ஆதாரம் செம்மைப்படுவதைப் பொறுத்து எப்போதும் பரிவுடன் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது அரசு.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கு கிராம முனிசீப் சங்கம் அரசாங்கத்திற்கு ஏதேனும் வேண்டுகோள் விடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிராம முனிசீப்கள் சங்கம் மாண்புமிகு நண்பர் ஈஸ்வர மூர்த்தி அவர்களின் யோசனையை ஆதரிக்காது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் விளைவாக பரம்பரை பாத்தியம் எடுபட்டு விட்டது. அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டியதில்லை என்ற நிலைமை இருக்கும்போது, எதிர்க் கட்சித் தலைவர் சொல்லியதுபோல, சிறிய கிராமங்களில் காலி ஏற்பட்டால் அவசியமில்லாமல் கிராம முனிசீப், கர்ணம், வெட்டியான், தலையாரி

7th March 1969]

என்று 750 பேர் உள்ள இடங்களுக்குப் போட்டு, அதனால் ரூ. 400, 500 என்று சம்பளம் கொடுப்பதைவிட அடுத்த கிராமத்தையும் சிறிய கிராமமாக இருந்தால் சேர்த்துவிட்டால், எதிர் காலத்தில் முன்னோடியாக இதுபோன்ற காரியங்கள் செய்ய அடிகோலியதாக இருக்குமாதலால் அதற்கு வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நல்ல யோசனை. அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Attack on a Revenue Inspector

*147 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether any Revenue Inspector was stabbed in Uttamapalayam taluk of Madurai district in November 1968 and admitted into the Madurai Hospital; and

(b) whether it is a fact that he was stabbed as a result of his over enthusiastic checking of rice smugglers?

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்ட சம்பவம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட உத்தமபாளையத்தில் 1968 நவம்பரில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒருவர் குத்தப்பட்டு மதுரை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாரா?

(இ) அரிசிக் கடத்தல்காரர்களை அதிகமாக கண்காணித்ததின் காரணமாக அவர் குத்தப்பட்டார் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம். உத்தமபாளையம் கடத்தல் தடுப்பு தனி வருவாய் ஆய்வாளர் திரு. பாண்டியன் என்பவர் 5—11—1968-ம் நாள் இரவு 3-30 மணி அளவில் கத்தியால் குத்தப்பட்டு முதலில் உத்தமபாளையம் அரசாங்க மருத்துவ மனையில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டார். பின்னர் 6—11—1968-ம் நாள் மதுரை எர்ஸ்க்கின் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார்.

(இ) ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, எங்கள் ஜில்லாவில் மட்டுமல்ல, கேரள எல்லையோரப் பகுதியில் இப்படிப் பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. கடத்தல்காரர்கள் கட்டுப்பாடாகச் சேர்ந்துகொண்டு ஆயுத பாணிகளாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அங்கே போலீஸ் பந்தோபஸ்து